**පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 492**

**ආයතනයේ නම : පාර්ලිමේන්තුවේ විපක්ෂ නායක කාර්යාලය**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: **492**

நிறுவனத்தின் பெயர் : **எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்**

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: **492**

Name of the institution: **Office of the Leader of the Opposition of Parliament**

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

**நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் பிரகாரம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பிலான அவதானிப்புகளையும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் சமர்ப்பித்தல்.**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **492**

நிறுவனத்தின் பெயர் : பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்

| **இல** | **அறிக்கையின் மூலம் இனம் காணப்பட்ட குறைபாடுகள் (2023 ஆம் ஆண்டிற்கான)** | **அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை** |
|---|---|---|
| 01 | உள்ளக கணக்காய்வு வினவல்களின் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான ஆவணங்களைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 02 | வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலையில் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 03 | பொருட்கள் கணிப்பீடு செய்யப்பட்டு, அது தொடர்பான அறிக்கைகள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலையில் அது தொடர்பான அறிக்கைகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பும் பணிகளை இற்றைப்படுத்தப்பட்ட முறையில் மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 04 | அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினையையும் நாடாளுமன்றத்தினால் வழங்கப்படும் உத்தியோகபூர்வ அறிவித்தலையும் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், பாதுகாப்பு தொடர்பான ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில், எளிதில் அடையாளம் காண முடியாதவாறு அவ்விலச்சினைகளை அகற்றிவிடக் கூடிய வகையில் அவை காட்சிப்படுத்தப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| 05 | செலவினத் தலைப்பொன்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பயன்படுத்திய பின்னர், ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்த நிதி ஒதுக்கீட்டு எல்லையை மீறும் வகையில் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினங்களுக்காகவே அவ்வாறான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |
| 06 | உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஆண்டின் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் தொடக்கத்தில் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| 07 | கணக்காய்வு முகாமைத்துவக் குழுவுக் கூட்டங்கள் முறைப்படி நடத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது அந்தந்த ஆண்டுக்குரிய கணக்காய்வு முகாமைத்துவக் குழுவுக் கூட்டங்கள் முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன. |
| 08 | நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வுக் கருத்து, தகைமைக்கு உட்பட்ட மட்டத்தில் / மறுப்பு மட்டத்தில் / எதிர்மறை மட்டத்தில் இருந்தது. | கணக்குகள் குறித்து சாதகமான/நற்சான்றுக் கருத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போதைய நிலையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 09 | நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கு ஏற்ப நிலையான அபிவிருத்தி இலக்குகளை இனம் கண்டிருக்கவில்லை. | தற்போதைய நிலையில் நிறுவனத்தின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் இனம் காணப்பட்டுள்ளன. |
| 10 | இனம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக எட்டப்பட வேண்டிய இலக்குகளைத் தீர்மானித்திருக்கவில்லை. | தற்போதைய நிலையில் அதற்கான இலக்குகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. |
| 11 | இனம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலையில் அதற்கான குறிகாட்டிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. |

சுரங்க ரணசிங்க
பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர்
2026.06. 07

Suranga Ranasingha
Secretary to the Leader of the Opposition
Office of the Leader of the Opposition
Parliament of Sri Lanka
Sri Jayewardenepura - Kotte